(செய்தித்தாளாகப்பதிவுசெய்யப்பட்டது)

கண்ணகி

தேசிய தீவிர மாதமிருமுறை

9 - SEP 1956
MADRAS

நேரு—காமத் கேள்வி–பதில்

நேதாஜி குறித்து நேருவுக்கும், திரு. காமத்துக்கும் நடைபெற்ற கேள்வி—பதில்களை தமிழ்த் தினசரிகள் சரிவரப் பிரசுரிக்கவில்லை. ஒரு போலித் தேசியத் தினசரி நேரு கூறியதையே புரட்டி வெளியிட்டிருக்கிறது, முழு விபரத்தையும் அடுத்த கண்ணகியில் விவரிக்கிறோம்.

—ஆசிரியர்.

ஒலி 4 | மதுரை, மன்மத—புரட்டாசி 16 (2-10-55) | அலை 9

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-OCT 1955
MADRAS

வாக்காளர்களின் தீர்க்க புத்திக்கு ஒரு ஒத்திகை!

வருகிறது! வருகிறது!! என்ன வருகிறது?

மாடு, மரம், யானை, சிங்கம், கை, கால், கருக்கரிவாள்

இன்னும் என்னென்னவோ!

எங்கே வருகிறது?
வீடு விடாய்!
ஏன் ?

முனிசிபாலிட்டி தேர்தலில் உங்கள் வோட்டை எனக்கு கொடுங்கள் என்று கேட்க!

இத்தனை படையெடுப்புகளையும் சமாளிக்க வேண்டிய நிலையில் நிற்கிறார்கள், நகரங்களில் உள்ள வோட்டர் மகா ஜனங்கள்.

கடந்த தேர்தலுக்குப் பிறகு, வாக்காளர்கள் தமது அநுபவத்தின் மூலம் எந்த அளவுக்கு தீர்க்கபுத்தியில் தேறி இருக்கிறார்கள்? என்பதற்கு வரப் போகிற நகர சபைத் தேர்தல் ஒரு சோதனை.

அதோடு அடுத்த வருடம்வரப் போகும் பொதுத் தேர்தலில் தமது தீர்ப்பைச் சரிவரச் செலுத்துமளவுக்கு பண்பட்டு விட்டோமா என்று வாக்காளர்கள் தம்மைத்தாமே சரிபார்த்துக் கொள்வதற்கு, இந்த நகரசபைத் தேர்தல் கடைசி ஒத்திகையும் கூட!

கடந்த காலத்தில் இந்திய விடுதலைக்காக, இந்திய மக்கள் கொடுத்த உயிர்க்காவுகள்........ ரத்தக் காணிக்கைகள்............ உழைப்புகள்...............எல்லா

(8-ம் பக்கம் பார்க்க)

நேதாஜிபற்றி நேரு அலட்சியம்!

உண்மையை மறைக்க ஒருபோதும் முடியாது.

சுதந்திர இந்தியாவின் மரியாதைக்குரிய ஒரேதலைவன் நேதாஜி குறித்து நேரு சர்க்கார் ஒரு பெரிய உண்மையை மறைக்க மறைக்க, புதிய பல வேடிக்கைகளெல்லாம் வெடிக்கின்றன.

இது, நேரு சர்க்காரை எவ்வளவு கேவலப்படுத்துகிறதென்பதை நேரு உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

இதுவரை நேதாஜி பற்றி ஏறுக்கு மாறாக வெளியான செய்திகள் ஒருபுறமிருக்க, டோக்கியோவிலிருந்து புதிய செய்தியொன்று புறப்பட்டிருக்கிறது.

அதாவது: நேதாஜி அவர்கள் விமான விபத்தில் சிக்கி காலமான பத்தாவது ஆண்டு நினைவு நாளை ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் சிலர் செப்டம்பர் 18-ல் கொண்டாடினார்களாம்.

அவ்விழாவில் கிட்டத்தட்ட 50 ஜப்பானியர்களும், மூன்றே மூன்று இந்தியர்கள்மட்டும் கலந்து கொண்டார்களாம்.

டோக்கியோவில் ஏராளமான இந்தியர்கள் இருக்கின்றனர். ஒருவருமே அதில் கலந்துகொள்ளவில்லை.

டோக்கியோவின் உள்ள இந்திய ஸ்தானிகர். அலுவலகத்தினர் கூட அவ்விழாவில் கலந்துகொள்ளவில்லை.

நேதாஜி அவர்கள் விமான விபத்தில் இறந்துவிட்டார் என்ற செய்தியே பொய் என்பது ஊர்ஜிதமாகி வரும்போது அவர் இறந்த நாளைக் கொண்டாடுவது மாபெரும் தவறு என்று மறுத்துக் கூறியே எல்லா இந்தியர்களும் கலந்து கொள்ளவில்லை. இந்திய ஸ்தானிகர் அலுவலகத்தினரும், இதே மாதிரி நேதாஜி இறந்துவிட்ட செய்தியில் நம்பிக்கை இல்லை எனக் கூறியே அவ்விழாவை நிராகரித்திருக்கின்றனர்.

டோக்கியோவில் நீண்ட காலமாக வாழ்ந்து வருபவரும், ஐ. என். ஏ. இயக்கத்தில் அதிகத் தொடர்பு கொண்டிருந்தவரும், நேதாஜியோடு நெருங்கிப் பழகியவருமான ஏ என், நாயர்என்ற ஒரு வயோதிகர், நேதாஜி இறந்த தின விழா என்ற இந்த நிகழ்ச்சி முரட்டுத்தனமானது— அர்த்தமற்றது-புரட்டானது—நேதாஜி பற்றிய விஷயத்தை இந்திய-ஜப்பானிய அரசாங்கங்கள் அதிகார பூர்வமான முறையில் பகிரங்க விசாரணை நடத்த வேண்டும்— என்று ஆவேசத்தோடு ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்.

1945-ஆகஸ்ட் 18ல் நேதாஜி போஸ், பார்மோசாவில் விமான விபத்தில் இறந்துவிட்டார்என்று ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் நேதாஜியுடன் விமானத்தில் இருந்த மற்றொரு ஜப்பான் ராணுவ அதிகாரி, **நான் நேதாஜியுடன்தான் விமானத்தில் வந்தேன்—ஆனால் அவர் இறந்த விஷயம் எனக்குத் தெரியாது—அவருடைய சாம்பல் என்று சொல்லி அதை டோக்கியோவுக்குக் கொண்டுசெல்லும்படி என்னிடம் கொடுத்தார்கள்—நேதாஜி இறந்துவிட்டார், அவரது அஸ்திதான் இது என்று சொன்னதுதான் எனக்குத் தெரியும்—நேதாஜியின் சவத்தை நான் பார்க்கவில்லை**— என்று கூறியிருக்கிறார். இச்செய்தி ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது. ஆனால் தமிழ்ப் பத்திரிகைகளில் இச்செய்தி, தேய்ந்தும்—திரிந்தும், திருகுதாளப்படுத்தப்பட்டும் வெளிவந்திருக்கிறது.

இச்செய்தி மூலம் நேதாஜியின் மரணச் செய்தியில் எத்தனை ரகப் புரட்டுகள் மேவிக்கிடக்கின்றன என்பது வெளிச்சமாகிறது. இது போகட்டும்.

சுதந்திர இந்தியாவில் மட்டுமல்ல சுதந்திர ஆசியாவின் தலைவாயிலில் வைத்து வணங்கப்பட வேண்டிய—ஆங்கிலோ—அமெரிக்கரின் ஆதிக்க எண்ணத்தை வளர விடாமல் தடுத்து, உலகெங்கும் சுதந்திர போதையை ஏற்றிய ஒரு மா மேதை—நேதாஜியின் விஷயத்தை இவ்வளவு மோசமான செய்திகளால் வளரவிட்டுக் கொண்டிருப்பது இந்திய அரசாங்கத்திற்குக் கேவலமில்லையா? என்று கேட்கிறோம்.

நேருவுக்கும், அவரது துவாரபாலகர்களுக்கும் நேதாஜியின் விஷயம் வேண்டாத ஒன்றாக கப் படலாம். ஆனால் இந்தியமக்கள் சக்தி அவரைப் பற்றித் தெரியத் துடிதுடிக்கிறது. உண்மை

யில் நேரு சர்க்கார், மக்களின் நேரடியான பிரதிபலிப்பாக இருக்குமானால், மக்களின் அபிலாஷைக்குரிய இவ்விஷயத்தில் இத்தனை அசட்டை காட்டுமா?

[7-ம் பக்கம் பார்க்க)

சுடச்சுட

குறிப்பு:— ஒருவர் பல கேள்விகளைக் கேட்கலாம். ஆனல், எல்லாக் கேள்விகளுக்கும் ஏக காலத்தில் பதில்களை எதிர்பார்க்க வேண்டாம். நித்திய மும் நூற்றுக்கணக்கான கேள்விகள் எமக்கு வருகின்றன. அவைகள் வரிசைக் கிரமப்படி பதில்களாகித் தீரும். உடனே பதில் கிடைக்கவில்லை என்று எவரும் கருத வேண்டாம். ஏற்கனவே நாம் குறித்துள்ளபடி உருப்படியான கேள்வியாக இருந்தால் நிச்சயம் பதில் அளிக்கப்படும். —ஆசிரியர்

—●—

எம். வைஜயந்தி—பெங்களூர்.

கே:— அமெரிக்கர்கள் வீசிய அணுகுண்டு, எத்தனை ஜப்பானியர்களைத் தின்றிருக்கிறது?

ப:— 6–8–45ல் ஹிரோஷிமா நகரில் வீசப்பட்ட அணுகுண்டு எண்பத்தாறுயிரத்து 141பேர்களைக் கொன்று, அறுபத்தோருயிரத்து ஆறு பேர்களை முடமாக்கிவிட்டது. 9-8-45ல் நாகாசாக்கி நகரில் வீசப்பட்ட அணுகுண்டு இருபத்தாறுயிரத்து 238 பேர்களைக் கொன்று, நாற்பத்து மூவாயிரத்து அறுபது பேர்களை முடமாக்கிவிட்டது.

கே:— தேசியத்திற்கு முரண்பட்ட ஆட்சி எப்படி இருக்கும்?

ப;— இப்பொழுது இந்தியாவில் நடைபெறுகிற மாதரிதான்.

கே:— ஜப்பானையும், ஜப்பானியர்களையும் பற்றித் தெரிந்து கொள்ள ஆசையாக இருக்கிறது கொஞ்சம் விவரியுங்கள்?

ப:— இயற்கையின் கடுமையான சோதனைகள் நிரம்பிய நாடு ஜப்பான். எல்லாச் சோதனைகளையும், கடமை என்ற நினைவில் முகச் சுழிப்பின்றி சமாளிக்க முடிந்தவர்கள், ஜப்பானிய மக்கள்.

ஜப்பான் மக்களின் பான்மைக்கு ஒரு தனி அம்சம் உண்டு.

ராணுவக் குணம் மிகுந்தவர்கள். ஆனல் அதே சமயம் கட்டுப்பாட்டின் கரையையே தெரிந்தவர்கள். தேசபக்தியை வெறியாக மாற்றிக் கொண்டவர்கள் ஜப்பானியர்கள்! சுயநலம், தேவை, எல்லாவற்றையுமே, நாட்டுத் தேவைக்குப் பின்னல் வைத்து விட்ட மனித இனம் இன்று உலகில் ஜப்பானில் தான் இருக்கிறது.

நாகரீகத்தின் எல்லையை எட்டியவர்கள்— மரியாதையின் விதிமுறைகளை அணுப் பிசகாமல் அநுசரிப்பவர்கள்— நீதியை மதிப்பவர்கள்— சிந்திக்கத் தெரிந்தவர்கள்— ஆண்மைக்கு முடைப் படாதவர்கள்— சுதந்திரத்தைப் பதத்தோடு பாதுகாத்துக் கொள்ளத் தெரிந்தவர்கள்— எல்லாவற்றிற்கும் மேலாக உயிரை மதிக்காதவர்கள்! ஆசிய வீரத்திற்கு இன்னும் உயிர்ப்பு சக்தி இருக்கிறது என்றால் அதன் ஆணி வேர் ஜப்பானில்த் தான் இருக்கிறது!

சூட்சம புத்தி, ஜப்பானியரின் குத்தகை! எதையும் சுத்தமாகவும், சுறுசுறுப்பாகவும் செய்வார்கள். மேற்கத்தியரின் ஆதிக்க வெறி இல்லாதிருந்தால் உலகச் சந்தையையே ஜப்பானியர் வளைத்துக் கொண்டு விடுவார்கள். வர்த்தகத் துறையில் நாணயத்தை முழு அளவுக்கு அநுசரிக்கும் இனத்தார் ஜப்பானியர் தான் என்று அமெரிக்கரே புகழுகின்றனர்.

2615 வருடங்களாக, ஒரே அரச பரம்பரை, வாரிசுவழுவாமல், ஆட்சி வகிக்கும் அதிசயச் சிறப்பு வாய்ந்த நாடு ஜப்பான் ஒன்றுதான். இன்

நேதாஜியின் நெஞ்சோட்டம்!

தொகுத்தவர்:

சக்திமோஹன்

வைர வீரன் நேதாஜியின் கருத்துக் குவியலிலிருந்து பிரித்தெடுத்த பொன் மொழிகள்!

பசும்பொன்; உ. முத்துராமலிங்கத் தேவரவர்களின் முன்னுரையுடனும்

நேதாஜியின் தாய், தந்தையரின் படங்களுடனும்

டைரி சைஸ் 320 பக்கம்

விலை அணு 12

தனிப்பிரதி வேண்டுவோர் 1 ரூபாய் ஸ்டாம்பு அனுப்பவும்

விற்பனையாளர்களுக்கு 25 சத வீதம் கழிவு

கண்ணகி 80, மேலாவணிமூல வீதி மதுரை

றைப ஜப்பான் மன்னர் மிக்காடோ பரம்பரையின் 125வது வாரிசு!

இன்றைய ஜப்பானின் ஜனத் தொகை எட்டரைக் கோடி. இதில் 76 லட்சம் மக்கள் டோக்கியோ நகரில் வாழுகிறார்கள்! அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட மிகப் பெரிய நகரங்கள் உலகில் நான்கு தான். ஒன்று நியூயார்க், இரண்டாவது கல்கத்தா, மூன்ருவது டோக்கியோ, நான்காவது லண்டன்! டோக்கியோ நகரின் விஸ்தீரணம் 797 சதுரமைல்கள்.

டோக்கியோ நகர மக்களிடம் மேற்கத்திய நாகரீகம் அதிகமாய் ஊடுருவி இருந்தாலும், அதை அவர்கள் வாழ்க்கையில் அநுசரிப்பதில்லை. அதாவது: முகத்தில் மேற்கத்திய நாகரீகமும், ஹிருதயத்தில் கிழக்கத்தியத் தன்மையும் கொண்ட மக்கள் ஜப்பானியர்! மக்களை புத்திசாலிகளாக வைத்திருப்பதில் ஜப்பானிய அரசாங்கம் பிரசித்தி பெற்றது.

க. ஜகதீசன்—நாகை.

கே:— ஆசைபெரிதா — அதிர்ஷ்டம் பெரிதா?

ப:— அதிர்ஷ்டம்தான் பெரிது.

வ. ச. தையல்நாயகன்—வரகூர்.

கே:— நேருவிடமிருந்து இந்திய தேசியம் எதிர்பார்ப்பது எதை?

ப:- அவர் பேச்சைக் குறைப்பதை—கூடுமானல் பேசாமலே இருந்துவிடுவதை! ஏனெனில் நேருவின் மிதமிஞ்சிய பேச்சுகளும், அளவில்லாத அறிக்கைகளும் இந்திய தேசிய சக்தியை இளைக்க வைத்துக் கொண்டிருக்கின்றன.

வே. தாசரதி—விருப்பாச்சி.

கே:- மதபேதம் பார்க்காதவர்கள் யார்?

ப:— பிச்சைக்காரர்கள்.

ஏ. வெங்கண்ணன்—திண்டுக்கல்.

கே:— இந்தியப் பிரதமராக நேருவுக்குப் பதில், நேதாஜி இருந்தால் எப்படி இருக்கும்?

ப:— தேவையின்றி வெளிநாடுகளில் இந்தியாவின் பெயரால் பெரும் பணத்தைத் தீர்த்துக்கொண்டிருக்கும் சவடால் சம்பந்தங்களான ஸ்தானிகர்களை இந்தியாவுக்கு வரவழைத்து, முதலில் அந்தச் செலவை மீதப்படுத்துவார். அப்புறம் ஆசியாவுக்கே களங்கமாக இருக்கும் பாகிஸ்தானை இந்தியாவாக்கி இந்தியாவில் ஆங்கிலோ—அமெரிக்க வாடையையே இல்லாமற் செய்வார். பிறகு சுதந்திரத்தின் ருசியை மக்களின் அநுபவத்துக்கு விடுவார்......

ம. க. தண்டபாணி—சென்னை

கே: படித்தவர்களைவிட படிக்காதவர்கள்தான் கெட்டிக்காரர்கள்—படிக்காதவர்கள்தான் காங்கிரசை வாழ்விக்கிறார்களென்று நமது முதன் மந்திரி காமராஜ் கூறியிருக்கிறாரே. எவ்வளவு மேதை பார்த்தீர்களா?

ப: ஆஹா! அதிலென்ன சந்தேகம். அவர் சொந்த அநுபவத்தைச் சொல்லியிருக்கிறார். இவர் ஆட்சி நீளட்டும். நீண்டால்தான் மக்கள் வட்டாரத்தில் படிக்காதவர்கள் தொகை 100—க்கு 98ஆக இருப்பது 100—க்கு 100 ஆக ஏறும். பள்ளிக்கூடச் செலவும் மிஞ்சும். அவராட்சியை, ஆண்டவனை வழுத்துவதை விட பி. சி. க்களை வழுத்துங்கள் இன்று தமிழ் நாட்டில் அந்தச் சேவைக்குத்தான் சீசன்.

மா. மணிமேகலை—மதுரை

கே: கவி பாரதியைப் பொறுத்தவரை, கடவுள் அவருக்குச் செய்த சாதகமென்ன?

ப: காலா காலத்தில் தன்னடி சேர்த்துக் கொண்டதன் மூலம், கடவுள் பாரதிக்கு சாதகம் செய்திருக்கிறார். இன்று பாரதியார் உயிரோடிருந்தால் தற்கொலை செய்து கொண்டிருப்பார்.

கே: பாரதி விழா இந்த வருடம் எங்கும் நடைபெற்றது, ஆனால் அதில் பாரதிதாசன் கலந்து கொள்ளவில்லையே என்?

ப: அவர் அழைக்கப்படவில்லை. கொள்கை எதுவாக இருந்தாலும், கவிதா சக்தியைப் பொறுத்தவரை பாரதியாரின் நேரடியான பிரதிபலிப்பு இன்று பாரதிதாசன்தான், உண்மையில் பாரதி விழாவை பேதநோக்கமின்றி கொண்டாடுவதாக இருந்தால் நிச்சயம் அவ்விழாவிற்கு பாரதிதாசன் அழைக்கப்பட்டிருக்க வேண்டும், ஆனல் அவர் அழைக்கப்படவில்லையாதலால் பாரதி விழா ஒரு பிரச்சார விழா என்ற அந்தஸ்தைத்தான் பெற முடியும். பாரதிதாசனை காங்கிரஸ்காரர்கள் கொண்டாடும் பாரதி விழாவிற்கு அழைத்தால், பாரதியாரின் உண்மை லட்சியங்களை உடைத்துக் காட்டி விடுவார். அது இன்றைய ஆட்சிக்குப் பாதகமாகிவிடும். ஆகவேதான் பாரதி விழாவில் பாரதிதாசன் அழைக்கப்படவில்லை என்று தோன்றுகிறது.

கருணாநிதி—கோவை

கே: இந்த வருடம் பாரதி நாள் காங்கிரஸ்காரர்களால் அமர்க்களப் படுத்தப் பட்டதே, என்ன அப்படித் திடீர் மோகம்?

ப: எல்லாம் தேர்தல் ஜுரம் தான். நகரசபைத் தேர்தல்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தந்த நகரக் காங்கிரஸ் கமிட்டிகளில் ஓட்டை விழுந்த இடங்களை அடைக்க மந்திரி பிரான்கள் அங்கங்கே போயாக வேண்டும். எப்படிப் போவது? ஏதாவது காரணம் வேண்டுமல்லவா? அதற்காகத்தான் இந்த வருடம் பாரதி விழா இந்தப்பாடு பட்டது, அரசாங்க பூர்வமாய்! பாரதியின் மீது எழுந்த உண்மையான மோகமல்ல. பாரதியார் இன்று உயிரோடிருந்தால், அன்று வெள்ளையாட்சி அவரை புதுவையில் வைத்தது போல் இன்றைய ஆட்சி அவரை எப்பொழுதோ தீர்த்துக் கட்டியிருக்

V.K
ஸன்பிளவர்
சோப்

சலவைக்குச் சிறந்தது!

ஸன் பிளவர் சோப்
வாங்கி உபயோகியுங்கள்
வி. கே. சன்ஸ்
[பி. ஐ. டபிள்யு. லிமிடெட்]
80, மேலாவணி மூல வீதி, மதுரை
எங்கும் ஏஜண்டுகள் தேவை.

கும். ஏனெனில் பாரதியாரின் லட்சிய ஆட்சிக்கு, இன்றைய ஆட்சி 100-க்கு 100 எதிரானது.

எம்மார். வேதவல்லி—ஸ்ரீரங்கம்

கே: ஆண்டவனைத் தொழுது தொழுது அலுத்துப்போய் விட்டது. ஒரு பயனையும் காணோம், ஆகவே வாயில் வந்தபடி வசை பாட நினைக்கிறேன். சரிதானா?

ப: தாராளமாய்ச் செய்யுங்கள். தன்னம்பிக்கைதான் கடவுள். தன்னம்பிக்கையில் பற்று இருக்கிறவரை எவருக்குமே வெற்றிதான். கடவுளைத்தொழுதீர்கள்—வெற்றி கிடைக்கவில்லை. இனி வசைபாட நினைக்கிறீர்கள்—வசையுங்கள். இதிலாவது தன்னம்பிக்கை வைக்க வேண்டும். ஆண்டவனைப் பொறுத்தவரை வழுத்தலும் வசவும் ஒன்றுதான். ஒன்று வழுத்த வேண்டும். அல்லது வசைய வேண்டும். ஆனால் ஒன்றுமே செய்யாமலிருக்கக் கூடாது—அதுதான் ஆண்டவனுக்குப் பிடிக்காதது.

சி. கோவிந்தராஜ்—மதிச்சியம்

கே: ஒரு நாட்டின் நிர்வாகத்தில் அன்னிய நாட்டினர் தலையிடக் கூடாது என்ற பஞ்சசீலக் கொள்கையுடைய இந்திய அரசாங்கம், இந்தியாவில் அமெரிக்க மிஷினரிகள் மதப்பிரச்சாரத்தோடு, இந்திய அரசியல் விவகாரங்களிலும் தலையிடுகிறார்கள் எனத் தெரிந்தும் நேரு சர்க்கார் சரியான நடவடிக்கை எடுக்காதது ஏன்?

ப: நேருவின் பஞ்சசீலம் என்பதே அமெரிக்கா வைத்திருக்கிற ஐ. நா. சாதனத்தின் ஒரு பிரிவுதான். ஆகவே பஞ்சசீலமென்பது அமெரிக்கரையும் பிரிட்டனையும் கட்டுப் படுத்தா-

க. அ. மௌனகுரு—மதுரை

கே: நேதாஜி மதுரைக்கு வந்த தேதிஎன்ன? அவர் ஆங்கிலத்தில் மதுரையில் ஆற்றிய சொற்பொழிவை தமிழில் மொழி பெயர்த்தது யார்?

ப: 6-9-39ல் மதுரையில் நேதாஜி ஆற்றிய ஆங்கில சொற்பொழிவை தமிழில் மொழி பெயர்த்தது காரைக்குடி என். எஸ். கணபதி என்ற பிராமண வாலிபர். அவர் இன்று இல்லை. சாகடிக்கப்பட்டுவிட்டார்.

கே: ஸ்ரீ காமராஜர் அவர்கள் சென்னையில் பேசும் போது, காங்கிரஸ்காரர்கள், பதவிக்காக காங்கிரசை விட்டு விலகி தேர்தலில் போட்டியிடுகிறார்கள். அந்த அடங்காப் பிடாரிகளைத் திரும்பவும் காங்கிரசில் சேர்க்க மாட்டோம் என்று கூறியிருக்கிறார். அதே சமயத்தில் மதுரை நகர சபைத் தேர்தலில் காங்கிரசில் இருந்து விலக்கப்பட்டவரை ஏன் காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்ந்தெடுத்தார்கள்?

ப: இப்பொழுது அகில இந்திய காங்கிரஸ் நேருவின் சொத்தாகவும் தமிழ்நாடு காங்கிரஸ் கனம் காமராஜரின் சொத்தாகவும் இருக்கிறது. காங்கிரஸ் மக்கள் சொத்தாக மாறுகிற வரை இப்படித்தான் நடக்கும் நீங்கள் யார் கேட்பதற்கு?

ஜி. பாலன்—மதராஸ்

கே: பார்வார்டு பிளாக்கிற்கும் காங்கிரசுக்கும் உள்ள வித்தியாசமென்ன?

பார்வார்டு பிளாக் முழுச் சுதந்திரத்திற்காகப் பாடுபடுகிறது. காங்கிரஸ் பாதிச் சுதந்திரத்தை வாங்கி அரை குறை மரியாதையோடு திருப்தியடைந்து விட்டது.

கே: பசும்பொன் தேவரவர்கள் பர்மா போயத் திரும்பியவுடன் நமக்குக் கிடைப்பவை எதுவாக இருக்கும்?

ப: தேவரவர்கள் பர்மா போய்த் திரும்பியவுடன் பாருங்களேன்.

வ. ம. அமலநாதன்—திருவெற்றியூர்

*கே: பசும்பொன் திரு. உ. முத்துராமலிங்கத் தேவர், கடவுளைக் காதலிக்கிறார்—தேசத்தைக் காதலிக்கிறார்—கொள்கையைக் காதலிக்கிறார்—நெறி, நேர்மை, நீதி எல்லாவற்றையுமே காதலிக்கிறார். உண்மையில் அவர் ஒரு உயர்தரமான—பண்பாடுடைய தலைவர். ஆனால், பொதுவுக்குத் தேவையான எல்லாவற்றையும் விரும்புகிற—காதலிக்கிற அவர், தமது வாழ்க்கைக்காக ஒரு பெண்ணையும் இதுவரை காதலிக்கவில்லை—விரும்பவில்லை, இது ஏன்? அவர், அவருக்காக ஒரு வாரிசு உண்டாக்கிக் கொள்ள வேண்டாமா?

ப: பசும்பொன் தேவரவர்கள் பரிசுத்தமான தேசிய வாதி. அவ

ஆறுமுகம் முத்திரை—
ஆர்.எஸ்.பதி மருந்து
(REGD)
தலைவலி, ஜுரம், காலரா முதலிய
240 வியாதிகளுக்கு கைகண்ட மருந்து
44 ஆண்டுகளாக புகழ்பெற்றுள்ளது
புட்டி 1-க்கு விலை அணா 10.
ஆர்.எஸ்.பதி & கோ. 214 & 215, மேலமாசிவீதி மதுரை.

பர்மாவுக்கு ஸ்டாகிஸ்ட் :
தேவர் கதம்ப நிலையம்,
316-318, மொகல்வீதி, இரங்கூன்.

ருக்கு சொந்த வாழ்க்கையை ஒரு தேச சுபிட்சம் பெரிது. அவர்மணம் பெண்ணைக் காலித்துக் கலியபிறகு செய்து கொண்டு விட்டால் விட அவருடைய கவனம் அவருடைய சொந்த வாழ்க்கை நலனில் திரும்பி விடும். ஒருவர் செய்யும் வாழ்க்கைத் தியாகம் ஒரு தேசத்திற்கே நலன் விளைவிக்கிறபோது, தியாக புத்தி நிரம்பிய பசும்பொன் தேவர் அந்தத் தியாகத்தைச் செய்து காட்டத் தவறுவாரா? ஆகவே அவர் இதுவரை செய்த எத்தனையோ தியாகங்களைப் போல, தமது வாழ்க்கை நலன்களையும் நாட்டிற்காகத் தியாகம் செய்கிறார். இதை தேச பக்தியுள்ள எவரும் வரவேற்கத்தானே வேண்டும்.

கே. எஸ். மணிராஜன்—மதுரை

கே: மதுரையில் தமிழ்ச் சங்கத்தை நிறுவியது யார்?

ப: பாலவனத்தம் ஜமீன்தார், பாண்டித்துரைத் தேவர்.

கே: ஆகாயம் நீல நிறமாயிருப்பதன் காரணம் என்ன?

ப: இது குறித்து விஞ்ஞானிகளே இன்னும் ஒரு முடிவுககு வரவில்லை.

கே: ஆரியர்கள் எதை எடுத்தாலும் மூன்றுதடவை செய்வதோ சொல்வதோ—காரணமென்ன?

ப: பிரும்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளையும் நினைவு படுத்திக் கொள்ள.

பி. பாலசண்முகம்மா—மதுரை

கே: அடிக்கடி கோபம் வருவதற்கு காரணமென்ன? அதற்கு என்ன செய்வது?

ப: பலவீனமும் வறுமையும் பக்குவமில்லாமையும்தான்! வறுமையின் முதிர்ச்சியில் பொறுப்புக் கூடி விட்டால் கோபம் தணிந்து விடும். கடமையையும் பொறுப்பையும் அதிகப் படுத்திக் கொள்வதுதான் கோபத்தைத் தவிர்க்கும் ஒரே வழி.

கே: பெண்கள் விரும்புவதும், விரும்பாததும் எதெது?

ப: விரும்புவது தனது வயதுக் குறைவை—விரும்பாதது, தன் கணவன் பிற பெண்களை அழகிகள் என்று சொல்வதை.

கே: ஆழக்கடல், பரந்த ஆகாயம் இரண்டுக்கும் எதை ஒப்பிடலாம்?

ப: ஆழக்கடலை பெண்களின் இருதயத்திற்கும், பரந்த ஆகாயத்தை நேதாஜி போன்ற பரிசுத்தமான தலைவர்களின் தூய தன்மைக்கும் ஒப்பிடலாம்.

கே: உலகப் பிரசித்தி பெற்ற மலை நாடுகள் எவை?

ப: இந்தியாவும், மலேயாவும்

ஆ. சொ. வைத்தியநாதன் ஆடுதுறை.

கே: உருவமுள்ள கடவுளை வணங்குவது நல்லதா? உருவம் இல்லாத கடவுளை வணங்குவது நல்லதா?

ப: அவரவரின் மனப் பக்குவத்தைப் பொறுத்து எந்தக் கடவுளையும் வணங்கலாம்.

கே: நாஸ்திகத்துக்கும், ஆஸ்திகத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: எல்லாமே மனித உற்பத்தி என்பது நாஸ்திகம். ஆனால் மனிதனை உண்டாக்கியதே கடவுள் என்பது ஆஸ்திகம். மனிதனுக்கு மேம்பட்ட சக்தி இல்லை என்பது நாஸ்திகம், மனிதனுக்கு மேம்பட்டது கடவுள் சக்தி என்பது ஆஸ்திகம்.

கே: மதம் விட்டு மதம் மாறக் காரணம் என்ன?

ப: தரித்திர நிலையும், சபல புத்தியும்தான்.

கே: மதம் எப்பொழுது—ஏன் தோன்றிற்று?

ப: உலகின் தோற்றவாயிலேயே மனிதனும் தோன்றி விட்டான். மனித வழியை வகுக்க மதம் உண்டாக்கப்பட்டது. மதம் என்ற ஒன்று உண்டாக்கப்பட்டிராவிடில், ஒழுங்கு என்ற முறையே ஏற்பட்டிராது.

கே: ஏழைகளின் கடிவாளம் மதமா? பணமா?

ப: பணம்தான்!

கே: உயிரில்லாத உருவத்தின் மேல் சிலருக்கு நம்பிக்கையில்லை ஏன்?

ப: உருவம் தெரியாத காற்றை அனுபவிக்கிறவர்கள், காற்றின் மீது நம்பிக்கையில்லை என்றால் என்ன பொருளோ அதுதான் இதற்கும்.

கே: எஸ்டேட் சட்டத்தின் திட்டமென்ன?

ப: வர்த்தக இனத்தாரை அரசியல் மேடையில் சாசுவதச் செல்வாக்கோடு வைத்துப் பராமரிப்பது.

● இந்த அலையில் பரிசுக்குரிய கேள்வி கேட்ட, திருவெற்றியூர் வ. ம அமலநாதனுக்கு 'கண்ணகி' இதழ்கள், 3-மாதம்வரை இலவசமாக அனுப்பப்படும். —ஆசிரியர்

நாவின் ருசிக்கும், சுகாதார விதிக்கும் ஒத்துக்கொடுக்கும் வகையில்
சிற்றுண்டிகளைத் தயாரித்தளிக்கும் சிற்றுண்டிச்சாலை
மதுரை நகரின் மத்திய வட்டாரத்தில்

ஒன்றே ஒன்றுதான்!

அதுதான்

எஸ். எஸ். கபே

(பிராமணாள் காபி ஹோட்டல்)
(அம்மன் சன்னதி காந்தி சிலைக்கு எதிரில்)

உரிமையாளர்:— எம். எஸ். சாமிநாதய்யர்.

அடுத்த அலையில்......?

தொட்டுத்தாலி கட்டியவன்?

சக்திமோகன் எழுதும்

கவின் நிறைந்த கற்பனைச் சித்திரம்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கேள்வி எழுகிறபோது தான், நேரு சர்க்காருக்கும், இந்திய மக்களுக்கும் இடையிலே உள்ள பேதத்தின் அளவு நன்கு புலப்படுகிறது.

நேதாஜி பார்மோசாவில் 1945 —ஆகஸ்ட் 18ல் விமான விபத்தில் சிக்கி இறந்து விட்டதாகச் செய்தி. ஆனால் செப்டம்பர் 18ல் அவரது நினைவு நாள் கொண்டாடப்படுகிறது—டில்லியில் அல்ல—டோக்கியோவில்; கொண்டாடியது இந்தியர்கள் அல்ல— ஜப்பானிய ராணுவத்தினர் சிலர்!

ஆகஸ்ட் 18ம் நாள் இறந்தவருக்கு செப்டம்பர் 18ல் நினைவு நாள் கொண்டாடுவது ஏன்?

இந்த ஒரு கேள்வியை மட்டும் அடிப்படையாக வைத்து நேரு சர்க்கார், ஜப்பான் அரசாங்கத்தை அழுத்தமாகக் கேட்டாலே போதும்—நேதாஜி பற்றிய செய்தியில் பொதிந்துள்ள புரட்டுகள் உதிர!

இந்த டோக்கியோ நிகழ்ச்சியை வைத்துப் பார்க்கிறபோது அங்குள்ள இந்தியர்கள் ஒரு புறமிருக்க, நேரு சர்க்காரின் ஸ்தானிகராலயத்தினரே நேதாஜி இறந்த செய்தியை நம்பவில்லை என்று திட்டமாய்த் தெரிகிறது.

அவ்வாறானால் இறந்து விட்டார் என்று தான் எங்களுக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து அறிகிறோம்— நம்புகிறோம் என்கிற நேருவின் கூற்றுக்குப்பொருளென்ன?

நேரு நம்புவதை, நேருவின் பிரதிநிதிகளே நம்பவில்லை என்று தானே பொருள்?

இவ்வாறானால் நேருவின் கூற்றை நம்பாத, நேருவின் டோக்கியோப் பிரதிநிதிகளை நேரு, உடனே விலக்கிவிட்டுவிட வேண்டும் அல்லது அவர்கள் கருத்து தான் சரி என்பதையாவது ஒப்புக்கொள்ள வேண்டும். செய்தி வெளியாகி பத்து நாட்களாகியும் நேருவின் வாயிலிருந்து இதுவரை எதையுமே காணோம்.

போலீஸ் மந்திரியின் வாய்ச் சவுடால்!

நேதாஜி இறந்து விட்டார் என்று நேருஜிக்குக் கிடைத்த தகவல்களில் உள்ள ஆதாரத்தைவிட இறக்கவில்லை என்பதற்குரிய ஆதாரங்கள் பெருகிக் கொண்டே போகின்றன.

இந்தியாவில் இதுவரை பல தலைவர்கள், நேதாஜி இறக்கவில்லை என்று கூறிவிட்டார்கள். கூறியும் வருகிறார்கள்.

அவர்களை எல்லாம் அழைத்து எந்த ஆதாரத்தின் மீது நேதாஜி உயிரோடிருக்கிறார் எனக் கூறுகிறீர்கள் என்று நேரு சர்க்கார் அரசாங்க பூர்வமாய் ஒரு பகிரங்க விசாரணை நடத்தினால் இரண்டில் ஒன்று தெரியும்.

நேரு சர்க்கார் உண்மையை மறைக்கிறதா? அன்றி நேதாஜி சாகவில்லை எனக் கூறுவோர்கள் உண்மையைத் திரிக்கிறார்களா? என்பதை மக்கள் புரிந்து கொண்டு தமது மரியாதைக்குரிய தலைவர் விஷயத்தில் ஒரு முடிவுக்கு வருவார்கள். நேரு சர்க்கார் இதைச் செய்யுமா? செய்யாவிடில் அதன் மீது நேதாஜி சம்பந்தமாய் மக்கள் கொண்டுள்ள ஐயப்பாடுகள் வலுப் பெற்று விடும்.

இதர எந்தக் கடமையையும் விட நேரு சர்க்காருக்கு இது அதிமுக்கியம், ஏனெனில் எதிர்கால இந்தியாவாவது பிறரின் அலட்சியத்திற்கு இலக்காகாமல் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும்— அந்த அளவுக்கு எதிர்கால இந்தியாவை நிர்மாணிக்க முடிந்த தலைவர் நேதாஜிதான் என்று மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர், எனவே நேரு அவர்கள் இதில் உடனடிக் கவனங்காட்டி பகிரங்க விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுகிறோம்.

ஏதோ ஒரு சொந்த லட்சியம்! அது வஞ்சம் தீர்க்கும் வெறியாக மாறி —அவனை ஒரு பெருங் கொள்ளைக்கூட்டத் தலைவனாக மாற்றி விட்டது.

அவன்தான் மான்சிங்! மத்திய பிரதேச அரசாங்கத்திற்கு அவன் ஒரு பெரிய மானம் பறிக்கும் பிரச்னையாகவே இருந்தான்—பல வருஷங்களாக!

அரசாங்கம் காட்டிய கைவரிசைகள் எத்தனையோ! ஒன்றும் அந்த மான்சிங்கைச் செய்ய முடியவில்லை.

முடிவில் மத்திய பாரத் போலீஸ் மந்திரி ஒரு சவால் விட்டார்: ஒரே வருடத்தில் அந்த மான்சிங்கைப் பிடித்துவிடுவது. அல்லது கொன்றுவிடுவது. இந்த இரண்டில் ஒன்றைச் செய்யாது போனால் தமது மந்திரி பதவியை விட்டுவிடுவது என்று அவர் சவால் விட்டிருந்தார்.

கொள்ளைக்கூட்டத் தலைவன் மான்சிங்கும் அவன் மகனும் சமீபத்தில் கொல்லப்பட்டுவிட்டனர். ஆனால் எப்படி?

சவால்விட்ட மந்திரியின் திறமை அவனைக் கொன்றுவிட்டதா? இல்லை.

முராவா ஜில்லாவைச் சேர்ந்த பிஜாப்பூர் கிராமமக்கள், மான்சிங்கைத் தந்திரமாக அழைத்து விருந்து வைத்து, பாலில் நஞ்சைக் கலந்து கொடுத்துவிட்டனராம். அதன் பயனாய் மான்சிங் இறந்துபோனான். இந்தத் தகவல் போலீசுக்கு எட்டியவுடன் அவர்கள் விரைந்து வந்து துப்பாக்கியால் சுட்டுத்தள்ளிவிட்டனர். ஆனால் போலீசாரின் துப்பாக்கிக் குண்டுகள் மான்சிங்கின் உயிரைக் குடிக்குமுன் கிராமியர்கள் கொடுத்த நஞ்சு உயிரைப் பறித்துவிட்டது. போலீசார் சுட்டது மான்சிங்கின் பிரேதத்தைத்தானும். அதன்மூலம் ஏற்பட்ட காயம்தான் பிரேதத்தின் மீது விழுந்தவை. அதே காயத்தைக் காட்டி, தமது சவால் நிறைவேறி

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

வற்றிற்குமே காங்கிரஸ் தான் சார்பு.

இதற்காகவேபிரிட்டன்ஆட்சி வெளியேறும்போது இந்திய ஆட்சியைக் காங்கிரஸிடம் ஒப்படைத்தது—மக்களைக் கேட்கவில்லை.

அன்றைய நிலையில் அதற்கு மக்களும் மாறுபடவில்லை—சரியென்றனர்—காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தது!

பின்னர் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் தமது ஆட்சிக்கு மக்களின் அங்கீகரிப்பைப் பெற தேர்தல் நடத்திற்று.

எத்தனையோ நெறிப்புரட்டுகளெல்லாம் செய்து மீண்டும் ஆட்சிக்கு வந்து ஐந்து வருடங்களாகின்றன.

கிட்டத்தட்ட எட்டு வருடங்களாய் இந்தியாவில் காங்கிரஸ் கட்சிதான், இந்தியஅதிகாரத்தை ஏகபோகமாய் அனுபவித்து வருகிறது — இந்திய மக்கள் தொகையில் 100ல் ஒரு பங்கினர்கூட காங்கிரசில் அங்கம்பெற்றிருக்காதபோதிலும்.

இந்த எட்டு வருட ஆட்சியில் காங்கிரஸ் கட்சி, தனக்கு எதிர்ப்பில்லாத ஒரு சூழ்நிலையைக்கூட உண்டாக்கி வைத்துக்கொள்ளவில்லை.

ஆனால் இதற்குப்பிந்தி சுதந்திரமடைந்த மக்கள் சீனா, மக்களின் சம்பூர்ண ஆதரவைப் பெற்றுக் குலுங்குவதோடு. மாபெரும் வல்லரசுகளுக்கு ஒருபெரும் குடைச்சலாகவும் இயங்குகிறது.

இதே மக்கள் சீனாவையும், இந்தியாவையும் இந்திய மக்கள் சரிபார்த்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

அவர்கள் சரிபார்த்தது சரிதானா? என்ற கேள்விக்குப் பதிலளிப்பதற்கு ஒரு வாய்ப்புத்தான் இந்த நகரசபைத்தேர்தல்.

இதில் ஏற்பட்டுள்ள போட்டிகளின் தன்மைக்கு பல காரணங்கள் உண்டு. ஆயினும் வாக்காளர் கவனிக்கவேண்டியது நகரசபை நிர்வாகம் மக்களுக்குச் சாதகமாய் இருக்கவேண்டும் என்ற ஒன்றைத்தான்.

இதைக் கவனத்தில் வைத்துக் கொண்டுள்ள வாக்காளர்களின் வாக்குகள், காங்கிரஸ் பெட்டியைக் காலியாய் போட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஏனெனில், காங்கிரஸ் கட்சி முளைத்ததும், வளர்ந்ததும், மக்கள் கட்சி என்ற அந்தஸ்தோடு தான், ஆனால் அது இன்று வாழ்வது, மக்கள் கட்சி என்ற அந்தஸ்தில் அல்ல!

உண்மையில் காங்கிரசை மக்கள் கட்சியாக ஆக்கவேண்டுமென்றால், அதில் இடைக்காலத்தில் சேர்ந்துவிட்ட அடசல்களைச் சுத்தப்படுத்த வேண்டும். அதற்குள்ள முதல் ஏற்பாடு இந்த நகரசபைத்தேர்தலில் காங்கிரஸ்காரர்களைத் தோற்கடிப்பது ஒன்றுதான்!

காங்கிரஸ் கட்சி இன்று நடப்பது சொந்தக்கால்களால் அல்ல—பொய்க் கால்ககளால்!

இதற்குக் கடந்த தேர்தலும் மந்திரிதளிற் சிலரும் தகுந்தஆதாரங்கள்!

சுயேச்சையாகவும், பிறகட்சி சார்பிலும் நின்றுவென்றவர்களை தன்னக்கட்டி, கதராடை கொடுத்து காங்கிரசில் சேர்த்துக் கொள்வது இன்று சர்வ சகஜமாகிவிட்டது, அம்மாதிரி இரவல் தயவில் இயங்குவதுதான் இன்றையக் காங்கிரஸ் ஆட்சியே இது மக்களுக்கு நல்ல அறிமுகமும் கூட!

மேலும், மக்களின் ஒருமித்த ஆதரவைப் பெற்ற ஒரு கட்சியின் தகுதிக்கு, இன்னும் காங்கிரஸ் கட்சி உயரவில்லை என்பதற்கு இது ஒரு நல்ல சாட்சியம்.

ஆட்சிக்கு வந்த எட்டு வருடங்களில், காங்கிரஸ் கட்சி. மக்களாதரவை எவ்வளவு பெற்றிருக்கிறதோ, அவ்வளவுக் கதிகமாக மக்களின் எதிர்ப்பைப் பெற்றிருக்கிறது.

இதற்கு ஆதாரமாக, இந்நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் பல ஊர்களையும், பல வார்டுகளையும் போட்டிக்கு அபேட்சகர்களை நிறுத்தாமலே விட்டிருக்கிறது. சென்னையையடுத்த திருவள்ளூர் நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஒரு அபேட்சகரைக் கூட நிறுத்தவில்லை.

மதுரையில் சில வார்டுகளை, போட்டிக்கு ஆள் நிறுத்தாமலே விட்டுவிட்டது.

இதன் பொருளென்ன?

அந்த நகர—வார்டு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்ற தீர்மானமா? அன்றி அந்த மக்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள் என்ற முடிவா?

இரண்டில் ஒன்றாகவோ அன்றி இரண்டுமாகவோ தானே இருக்க வேண்டும்?

இதுபோக,

நகரசபையில் ஒரு கட்சியின் ஆதிக்கம் இருப்பது மக்கள் நலனுக்குப் பெருங்கேடு.

அதோடு ஜனநாயக நாடுகளில் ஒரே கட்சியின் நிர்வாகத்திற்கு அரசாங்கத்தையும், ஸ்தல ஸ்தாபனங்களையும் தொடர்ந்து அநுமதிப்பது ஜன சாதகத்தை விட எதேச்சை தான் முதிரும்.

ஒரு கட்சி நிர்வகித்தவரை அதிருப்திக்கு எதுவுமில்லைஎன்ற திருப்தி ஏற்பட்டாலன்றி ஒரே கட்சியை மீண்டும் நிர்வாகத்திற்கு அநுமதிப்பது மக்களின் புத்திசாலித்தனத்துக்குப் புறம்பு.

காங்கிரஸ் நிர்வாகத்தை காலிலிருந்து தலைவரை எட்டு வருடங்களாக அநுமதித்தாய்விட்டது. கிடைத்தது என்ன? அதிருப்திதான்.

இந்த நிலையிலாவது நிச்சயம் ஒரு மாற்றம் வேண்டாமா? மக்கள் சிந்திக்க வேண்டுகிறோம்.

ஜனநாயக நிர்வாகத்துறைகளை எல்லோருமே நிரவிவகிக்க சர்தர்ப்பமிருக்க வேண்டும். அப்

(16-ம் பக்கம் பார்க்க)

சினிமா பகுதி

கோமதியின் காதலன்

மதுரை தங்கம் தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்கிறது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு, அருவருப்பற்ற— அநுபவிக்க முடிந்த ஒரு ஹாஸ்யப் படம் திரையேறி இருக்கிறது என்று திருப்திப்பட வைக்கிறது கோ. காதலன்.

தேவன் எழுதிய மிகப் பெரிய தொடர் கதையை மூன்று மணி நேரத்திற்குச் சுருக்கி, அனேக மாய் சம்பவ நெகிழ்ச்சி எதுவு மின்றி திரைக் கதையாக்கி இருக்கிருர் ப. நீலகண்டன்.

அற்ப விஷயம்; இதில் காதலன் —காதலியின் தந்தைமார்கள் கடும் பகை கொள்கின்றனர்.

இது கதையின் தொடுவாய்.

தந்தையரின் கடும் பகையை, பிள்ளைகளின் காதல் உடைத்து விடுகிறது. பிறகு இரு குடும்பத்தினரும் பரஸ்பரப்பட்டு விடுகின்றனர்,

இது கதையின் விடுவாய்.

இதற்கிடையே பல சம்பவங்கள்—அத்தனையும் ஹாஸ்யப் பிரவாகம். கசப்புத்தட்டும் தன்மையில் எதுவுமே இல்லை.

வாங்கிய கலர்பாட்டிலை வாயருகில் கொண்டுபோவதைக் கூட மறக்கச் செய்து, நம்மை கதையோடு உடன்படுத்தி விடுகின்றது சம்பவ விரைவு.

வசன வீச்சுகளுக்கு இதில் வரும் சம்பவங்கள் இடங்கொடுக்காததால், வசனம் யார்—என்ன—எப்படிப் பேசினுர்கள் என்பதே தெரியவில்லை.

காதலுக்குரிய சேஷ்டைகளையும், அதே சமயம் ஒரு காதலிக்கு வேண்டிய பொறுமையையும், பொறுப்பையும் சாவித்திரி அருமைபடத் தாங்குகிருர். ஆனுல் பாவம்! அவரது உடற்பாரம் ஒரு காதலியாக நடிக்கும் அம்சத்தையே அலக்கழிக்கிறது.

டி. ஆர். ராமச்சந்திரனுக்கு காதலனுக நடிக்கும் தன்மைகள் உள்ள அளவுக்கு அவரிடம் முகவிலாசம் இல்லை. அவரைப் பார்த்தவுடன் சிரிப்புவந்து விடுவதால் அவர் அநுபவிக்கும் துன்பங்கள் நமது அநுதாபத்தைப் பெற முடியவில்லை.

தங்கவேலு இதில் கொஞ்சம் கட்டுப்பட்டு, நடித்திருக்கிருர். ஆகவே அவரது கட்டங்கள் அற்புதமாக இருக்கின்றன.

சண்டியர் முத்துலெட்சுமி இதில் சாரங்கபாணி (ஜமீன்தாரின் நண்பர்)யின் வைப்பாட்டியாக வருகிருர். இந்தச் சண்டியர் அம்மாள், ஐயா வாகிவிட்டால் எவ்வளவோ மேலாக இருக்கும். பெண்மை என்ற ஒன்று இவரிடம் நெருங்கவே அஞ்சுகிறது.

மற்றைய நடிகர்கள் நன்ருகவே நடித்துள்ளனர்

சம்பவ வேகங்களைத் தொடர்—ந்து பாடல்களின் இனிமையும் இழைந்து செல்வதால் கோமதியின் காதலன் நல்லதொரு பொழுது போக்குப் படமாக உருப்பெற்றிருக்கிறது. மனைவி மக்களோடு ஒவ்வொருவரும் பார்க்கவேண்டிய படம்.

கல்யாணம் செய்துக்கோ!

அறிவு, கலை, ரசிகத் தன்மை எல்லாம் இமயத்தின் உச்சிக்கு ஏறிக் கொடி வீசும் இந்த—55ம் வருடத்தில், இம்மாதிரி ஒரு படம் பிடிப்பது என்ருல், இப்படத்தைப் பிடிப்பதற்காகச் செலவழிக்கப் பட்ட பணம்,...

- புதையலில் கிளம்பி இருக்க வேண்டும்—
- அல்லது, வராது என்று செலவெழுதிய பிறகு எதிர்பாராமல் திரும்பி வந்த பணமாக இருக்க வேண்டும்—
- அல்லது பிளாக் மார்க்கட் காரனை ஏமாற்றும் நோக்கத்தில் கடன் வாங்கிய பணமாக இருக்க வேண்டும்—
- அல்லது 500ரூ சரக்கை 5லட்சத்துக்கு இன்சூர் செய்து, சரக்குக்குத் தீ வைத்து இன்சூரன்ஸ் கம்பெனியையே கெடுத்து வாங்கிய பணமாக இருக்கவேண்டும்—

இந்த வகைகளில் ஏதோ ஒன்றின் மூலம் வந்தபணமாக இல்லாத போனுல் இம்மாதிரி ஒரு படத்தைப் பிடித்துதைரியமாகத் திரையிட எந்த முதலாளியும் முன்வர மாட்டார் என்றே கருதுகிருேம்.

உண்மையில் கஷ்டப்பட்டு, நெறியோடு சம்பாதித்த பணமாக இருந்தால், ஏதோ, ஆர்வத்திலோ அன்றி லாபநோக்கத்திலோ இந்தப் படத்தை எடுத்து முடித்த பிறகு அதைத்திரையிட்டுப் பார்த்த முதலாளி—

மட்டரகமான தெருக் கூத்திலும் கேடு கெட்ட நாடகப் பகுதிகள் வரும் ரீலில் ஒரு இரண்டாயிரம் அடியையும்,

மாஜிப் புகழ் திரு. பி. எஸ். கோவிந்தனின் எஞ்சியுள்ள புகழையும் துளைப் போடும் நடிப்புகள் வரும் பகுதியில் ஒரு ஏழாயிரம் அடியையும்,

அழகின் அஸ்திவாரத்தையே பிடுங்கி எறியும் இரண்டு அழகிகளின் நாட்டிய-நடிப்புப் பகுதிகளில் ஒரு ஆயிரம் அடியையும்,

சாமுத்ரிகம் அண்டவே அஞ்சும் அடுத்தபிறவிஅழகி கிருஷ்ண குமாரி நடிக்கும் பகுதியில் ஒரு இரண்டாயிரம் அடியையும்,

குறிப்பாக முதன் முதலில், பெயர்களை காட்டும் பகுதி நீங்கலாக பாக்கி எல்லாவற்றையுமே வெட்டி எறிந்து போட்டு வீட்டிற்கு வந்திருப்பார்!

இம்மாதிரி ஒரு படத்தை 55ம் வருடத்தில் எடுப்பதற்குச் செலவழித்த பணத்தை, திருப்பதி உண்டியலில் போட்டிருக்கலாம்.சம்பத்தானத்திற்குக் கொடுத் திருக்கலாம் அல்லது

[16-ம் பக்கம் பார்க்க]

(சென்ற அலைத் தொடர்ச்சி)

ஏழைகளை ஏய்க்கவே மதம் *

மூலம்: மார்க்சிம் கார்க்கி.
தமிழில்: சக்திமோகன்.

● பிறகு அவர் தொண்டையைச் செருமிவிட்டு, குரலில் இருந்த கரகரப்பைச் சரிசெய்துகொண்டார். அதோடு அவர் ஓரக்கண்களால் என் முகபாவத்தைக் கவனிக்கவும் தவறவில்லை. உடனே நிமிர்ந்தார். கேளப்பா கேள்—நான் தேவாலயங்களில் பேசும் பாங்கை—" கிருத்துவ சகோதர- சகோதரிகளே!

எதெதையோ நினைத்து உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம்.

மனிதனுக்கு உலக வாழ்வு சாசுவதமல்ல, கொஞ்ச காலம் தான் வாழ முடியும்.

ஒரு மனிதன் 40—வயதுவரைதான் இந்தஉலகில் நன்ருய் உழைக்க முடியும். அதற்குமேல் அவன் தொழிற்சாலைகளில் வேலை செய்ய இயலாது. உயிருக்கு உத்திரவாதமும் கிடையாது. உங்கள் கை, இயந்திரத்தில் வேலை செய்யும்போது ஒரு தவ்று செய்துவிட்டால் அந்தத் தவறு உங்கள் எலும்புகளில் ஒன்றை முறித்து விடும்.

சூரியன் கொஞ்சம் ஓங்கிக் காய்ந்துவிட்டால் உங்கள் உயிருக்கு உலை வைத்துவிடும்,

இது மட்டுமல்ல, ஒரு நோய், அல்லது துரதிர்ஷ்டம் அடிக்கடி சம்பவித்து உங்களை வேட்டையாடிவிடும்.

உயரமான வீடுகளில் வசிக்கும் ஒரு மனிதன் குருடனைப் போன்றவன். கொஞ்சம் தவறிவிட்டால் அவன் அந்திய காலத்தைச் சந்திப்பதிலிருந்து தப்ப முடியாது. சோதரர்களே! உலக வாழ்வைச் சதமென்றெண்ணுதீர். உங்கள் மகத்தான மன்னனும், தந்தையுமான கிருஸ்து இந்த உலகில் இல்லை— சொர்க்கத்தில் இருக்கிருர். இந்த உலகத்தில் இருக்கிறவரை உள்ளதைக்கொண்டு நிம்மதியாக, முணுமுணுப்பின்றி சேவை செய்தால் தான் அவர் உங்களை தனது சொர்க்க பூமிக்கு அழைத்து' உலகில் நீங்கள் செய்த சேவைக்காக ஆசிகூறி இன்பத்தைக் கொடுப்பார்.

இந்த உலகவாழ்வு ஒரு பாபவிமோசனம் தான். நீங்கள் இங்கு அமைதியாக அநுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் சொர்க்க நாட்டில் இன்பம் காத்திருக்கிறது. கடமையைச் செய்யுங்கள். போதாது என்று எதையும் கேட்காதீர்கள். கிடைத்தது எதுவாஞலும் அது ஆண்டவன் கொடுத்தது என்று எற்றுக்கொள்ளுங்கள், நமது முன்னோர்கள் இப்படி வாழ்ந்துதான் பரமண்டலத்தில் இன்று சுகமனுபவிக்கிருர்கள்.'' என்று கூறிவிட்டு...

இந்த இடத்தில் அவர் பேச்சு நின்றது. எறிட்டுப் பார்த்தேன் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தார். பிறகு... மேலும் விடவில்லை தொடர்ந்தார்—இப்பொழுது அவர் குரலில் கொஞ்சம் கடுமையும் கம்பீரமும் கூடி இருந்தது—ஆனுல் அந்த வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வெளியே வந்து விழுகையில் கொஞ்சம் குளிரேறி கேட்பதற்கு ரசமாக இருந்தது,
அவர் கூறினுர்:

ஆம்! அருமைச் சகோதரர்களே! சகோதரிகளே!!

இந்தப் பாழும் உலக வாழ்க்கையில் ஒன்றமே இல்லை. எல்லாம் மிக மிக அற்பம். இதில்நாம் அதிக ஆசை வைக்கக் கூடாது.

நமது அருகிலிருப்பவர்கள் எவராக இருந்தாலும், அவருக்காக நமது வாழ்க்கையைத் தியாகம் செய்ய யோசிக்கவே கூடாது. அதுதான் நமது கடமை.

பூலோக இனிமை என்பதெல்லாம் வெறும் பிரமை- பேயின் விளையாட்டு!

எழை. பணக்காரன். அரசன் ஆண்டி அனைவருமே ஒருநாள் நிச்சயமாய்ச் சாக வேண்டியவர்கள்.

இந்த உலகில் நாம் ஒரு பணக்காரனுக்காக நமது உழைப்பைத் தியாகம் செய்தால், சுவர்க்கத்தில், அந்தப் பணக்காரன் நமக்கு சேவை செய்வான்-

இங்கு எழைகளாக இருக்கும் தொழிலாளர்களெல்லாம், கடவுள் உலகில் முதலாளிகளாக இருப்பார்கள், இதற்கு ஆண்டவன் விதிசெய்திருக்கிருர். நமக்கு இந்த உலகை விட கடவுள் உலகம் தான் சாஸ்வதமானது'.

எனவே ஏன் இந்த உலகில் உங்கள் வாழ்க்கைத் தேவைக்காகப் போராடுகிறீர்கள்? வேண்டாம்அதில் பயனே இல்லை. உங்களுக்கு எது கிடைக்கிறதோ அது ஆண்டவன் கொடுத்தது என்று சந்தோஷியுங்கள். இந்த உலகில் உங்களை எந்த முதலாளியாவது அதிகம் வேலை வாங்கிஞல் அதற்காக அவன் மீது சீருதீர்கள். கடவுள் கட்டளை அது. அவனை கடவுள் உலகில் நீங்கள் பதிலுக்குப் பதில் வேலைவாங்கிப் பட்டினி போட்டு வஞ்சம் தீர்த்துக் கொள்ளலாம்'.........என்று கூறியவர் சற்றே ஓய்ந்தார். கண்களை மூடிக்கொண்டே நாற்காலியை ஆட்டினுர். அந்தவாறே மேலும் சொன்னுர்:—

இந்த உலகத்தில் உள்ள பணக்காரர்கள், பணத்தில் தான் பெரியவர்களே தவிர பக்தியில் அல்ல. பக்தியில் செல்வர்கள்ஏழைகள்தான்.

(15ம்-பக்கம் பார்க்க)

வெண் சங்கு

டிரேட் மார்க்

சீயக்காய்தூள்

எண்ணெய் குளிப்பிற்கு
மேன்மையானது என்று

ஆற்றோரம் குளத்தோரம்,
கிணற்றோரம், குழாய்ஓரம்
எங்கும் இதே பேச்சுத் தான்.

எஸ். உரிமையாளர்:
பெத்தண்ண நாடார்
தஞ்சாவூர். போன் நிர். 108

● தொடர்கதை

"ஆத்ரேயன்"

● அவள் வானவில்லே பெண்ணுருவங் கொண்ட மாதிரி... அணையாத நெய் விளக்கு அணைந்துவிட்டது............

● அம்பிகாபவன அதிபதியின் நெஞ்சை அர்த்தமில்லாத ஒன்று அழுத்தி வதைக்கிறது......

● நல்லவர்களைக் கேடு தீண்டுவதுதானே உலகியல்?

எங்கும் பிரதிபலித்த மாலைக் கதிரவனின் தங்கமயமான காந்தி வரவர மங்கி மறைந்துபோயிற்று. லேசாக இருள் சூழ ஆரம்பித்தது. கங்காதரர் பங்களா தோட்டத்தில் நின்றுகொண்டே அந்த அழகைப் பார்த்துக்கொண்டு நின்றார். அந்தக் காட்சி அவர் மனதிற்கு உற்சாகம் அளிக்கவில்லை.

பார்வையை பங்களா—அம்பிகா பவனம் பக்கம் திருப்பினார். தீபாலங்காரம் செய்தது போல் விளககுகள் எரிந்துகொண்டிருந்தன.

கையிலிருந்த பிரம்பை சுழற்றிக் கொண்டே பங்களாப் பக்கம் நடந்தார்.

பங்களா வாசலில் ஒரு இளம் பெண் நின்றுகொண்டிருந்தாள், பதினைந்து வயதுதான் இருக்கும் அவளுக்கு. அவள் கங்காதரரின் நண்பரும் எஸ்டேட் மானேஜருமான சோமநாதரின் புதல்வி துளசி.

"மாமா! ஏன் இன்று ரொம்ப நேரம் தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருந்துவிட்டீர்கள். பூஜை அறையில் தீப ஆராதனைக்கு எல்லாம் சித்தமாக இருக்கிறது வாருங்கள்" என்று மரியாதையும் வாஞ்சையும் கலந்த குரலில் சொல்லிவிட்டு முன் நடந்தாள்.

"ஆமாம் அம்மா, மாலை அழகைப் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டேன் பொழுது மறைந்ததே தெரியவில்லை இதோ வந்துவிட்டேன் பூஜையை ஆரம்பிக்கச் சொல்" என்று சொன்னாரே தவிர அங்கே நின்று துளசி நடந்துபோகும் அழகை பார்த்து ரசித்துவிட்டுத்தான் ஸ்நான அறைப்பக்கம் போனார்.

அழகும் கம்பீரமும் நிறைந்த அம்பிகா பவனத்தில் பூஜை அறை ஒரு சிறு கோவிலாகவே காணப்பட்டது. அந்த அறைக்கு வெளியே பெரியதொரு ஹால் சபா மண்டபம்போல் இருந்தது. சுமார் அறுநூறு பேர் சௌகரியமாக அமர்ந்துகொள்ளும் படி இருந்தது.

துளசி

அந்த ஹாலில்தான் நவராத்திரி போன்ற விசேஷ காலங்களில் பெயர்பெற்ற சங்கீத கச்சேரிகளும் கதாகாலக்ஷேபங்களும் நடைபெறும்

அன்று வெள்ளிக்கிழமை பூஜை கொஞ்சம் விசேஷம், பிரசாத விநியோகமும் உண்டு- கிராமத்து ஜனங்களும் வந்து வணங்குவார்கள்.

பூஜை ஆரம்பித்து நடந்துகொண்டிருந்தது. கங்காதரர் தனிவழியாக பூஜை அறைக்கு வந்து கைகூப்பி நின்றார். பக்கத்தில் துளசி நின்றாள்.

வெளியே ஹாலில் ஊர் ஜனங்கள் அடக்க ஒடுக்கமாக நின்றுகொண்டிருந்தனர்,

தீபாராதனை முடிந்து புஷ்ப பிரசாதங்கள் வழங்கியபின் கூட்டம் கலைந்தது. கங்காதரரும் புஷ்ப பிரசாதங்கள் வாங்கிக்கொண்டு புறப்பட்டார்.

துளசி பூஜை அறையிலேயே கண் மூடி தியானத்தில் ஆழ்ந்தாள்,

அம்பிகா பவனம் தங்க வயல் கிராமத்தில் வடகோடி எல்லையில் சற்று உயரமான ஒரு குன்றின்மேல் கட்டப்பட்டிருந்தது. பழமையான கட்டிடம்தான். ஆனால் நவநாகரீக அலங்காரங்களும், சோபாக்களும் ஜன்னல் திரைகளும், மேஜை விரிப்புகளும் இடம்பெற்றிருந்தன. இருபத்தைந்து மைல் தூரத்திலிருந்து தனியாக அந்த பங்களாவுக்கு மின்சார சக்தியும் வந்திருந்தது. இரவில் பவனம் ஜகஜ்ஜோதியாக திகழ்வதற்கு என்ன!

அம்பிகாபவனம் அதிபர் கங்காதரர் கோடைகாலத்திற்கு வேறு இடம் தேடிப் போகவேண்டாம். கோடைக்கும் நல்ல குளிர்ந்த காற்று அங்கே வீசிக்கொண்டிருந்தது இயற்கையிலேயே!

குன்றிற்கு போகும் பாதை வளைந்து வளைந்து சென்றாலும் உயரே போய் வருபவர்களுக்கு சிரமமே தென்படமாட்டாது.

பாதை ஓரங்களில் நட்டு வளர்க்கப்பட்ட பல ஜாதி பழ மரங்களின் நறுமணம் குன்று முழுவதும் வியாபித்து மனதிற்கு புத்துணர்ச்சியை உண்டாக்கக்கூடியதாக இருந்தது.

அப்பொழுது அந்த பவனத்தில் கங்காதரரும் அவர் எஸ்டேட் மானேஜர் சோமநாதரின் குடும்பமுமே வசித்து வந்தனர்.

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

கங்காதாருக்கு வயசு அறுபதை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்தாலும் நாற்பது வயது ஜவானாகவே காணப்பட்டார். அவர் ஒரே மகன் ராஜா மேற்படிப்பிற்காக அமெரிக்கா போயிருந்தான்.

ராஜாவுக்கு ஒரு வயதாகும்போது அவன் தாயார் இறந்துபோனாள், அந்த நாள் முதல் சோமநாதரின் மனைவி கல்யாணிதேவியே பெற்ற குழந்தைக்குமேல் கண்ணும் கருத்துமாய் வளர்த்தாள்- எவ்வளவு பணம் செலவு செய்தாலும் தகுந்த போஷணையும் பராமரிப்பும் வேண்டுமல்லவா!

ராஜாவுக்கு நான்கு வயதாகும் போது கல்யாணிதேவி துளசியைப் பெற்றெடுத்தாள். ராஜாவுக்கு விளையாட்டு பாப்பாவாக துளசியும் அம்பிகா பவனத்தில் வளர்ந்தாள்.

பொற்சித்திரம் போல் துளசி நாளுக்குநாள் வஸந்தகால மொட்டுப் போல் பெரிதாகி மலர்ந்தாள், பட்டுப்போன்ற மேனியும் நீண்ட கண்களும் அவள் அழகின் முக்கிய அம்சங்கள்.

ராஜாவோ ராஜலட்சணங்கள் அவ்வளவும் ஒருங்கே பொருந்திய பொற்சித்திரமாக இருந்தான்.

கிராமத்து ஜனங்கள் அவனை சின்ன ராஜாவென்றே விளித்தனர்.

அவர்கள் குழந்தைகால விளையாட்டுக்களும் குறும்புத்தனமும் இப்போது இறந்தகாலத்தில் மங்கி மறைந்தன. இருவரும் பள்ளிக்கூடம் அனுப்பப்பட்டனர்.

துளசி கிராம பள்ளிக்கூடத்தோடு படிப்பை நிறுத்திக்கொண்டு வீட்டு உபாத்தியாயரிடம் மேல்கொண்டு படித்துவந்தாள்.

ராஜா கல்லூரி படிப்பை முடித்துவிட்டு தந்தையின் ஆசைக்காக அமெரிக்காவிற்கு மேல் படிப்பிற்குப் போயிருந்தான்.

துளசி இங்கு அவன் படித்துத் தேறி பத்திரமாக நாடு திரும்ப வேண்டி விரதமும் பூஜையும் விரிவாகச் செய்து வந்தாள்.

பவனத்தில் துளசி இட்டதே சட்டம், கங்காதரரும் சோமநாதரும் அவள் வழிக்குப் போகமாட்டார்கள். துளசி மேல் அவர்களுக்கு அவ்வளவு ஆசையும் நம்பிக்கையும்.

2

கங்காதரர் ஜமீன்தார் இல்லாவிட்டாலும் அவரை கிராமத்தார் ஜமீன்தார் என்றே அழைத்தனர். அவரோ குடியானவர் உழைப்பால் வாழும் சுயநலகும்பல்போல் அல்லாது, தம்ஏழை குடியானவர்கள் போலவே வாழ்ந்தார் அவர்கள் நலத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

'சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டார்' என்ற சொல்லுக்கு இடமின்றி சோமநாதரும் கங்காதரருக்கு மேல் கண்ணும் கருத்துமாக குடியானவர்களிடமும் தன் கீழ் வேலை பார்ப்பவர்களிடமும் நடந்து வந்தார் ஆகையால் குடியானவரும் மற்றவரும் கங்காதரருக்கும் சோமநாதருக்கும் மரியாதையில் வித்தியாசமே இல்லாதிருந்தது.

மேல்படிப்புக்கு அமெரிக்கா சென்றிருக்கும் ராஜாவும் தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவனாகவே காணப்பட்டான். சிறுவயதிலிருந்தே வெட்டி வம்புக்கும் வீண் விளையாட்டுக்கும் போகாமல் மனம்போனபடி காடு கழனி மேடுகளில் உலாவித் திரிவான். பருவ காலங்களில் செடி கொடிகளில் வர்ண மலர்கள் முறுவல் செய்யும்போது அந்த அழகிய சித்திரத்தைக் கண்டு மெய் மறந்து போவான். உடன் சுற்றும் துளசிக்கும் விளக்குவான். இந்த குழந்தை கால மோகமே பிற்காலத்தில் கல்லூரியிலும் முககிய பாடமாக தாவர சாஸ்திரத்தையே பயின்றான். அதுவே அவனை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றது.

துளசி தியானம் கலைந்து கண் விழித்தபொழுது தான் மட்டுமே பூஜை அறையில் இருப்பதை உணர்ந்து வெளியே வந்தாள்.

பூஜை அறைக்கு வெளியே ஹாலில் மாட்டப்பட்டிருந்த ராஜாவின்படமே முதலில் அவள் பார்வையில்பட்டது. அதன்முன் ஒரு நிமிடம் நின்று பார்த்துவிட்டு கங்காதரர் அறைக்குப் போனாள்.

துளசியைப் பார்த்ததும் அவர் கேட்டார்:

"என்ன துளசி! இவ்வளவு நேரம். அம்பிகையிடம் என்ன வரம் கேட்டாய்? கொடுத்தாளா?"

இதழ்க்கடையில் ஒரு மெல்லிய சிரிப்பு பூரித்தது.

"வரம் ஒன்றும் கேட்கவில்லை தினம்போல்தான் ஸ்லோகம் சொல்லிக்கொண்டிருந்தேன் கண்ணை மூடிக்கொண்டு. கண்ணைத் திறந்து பார்த்தேன் நானும் அம்பிகையும்தான் இருந்தோம். தனிமையிலும் அம்பிகை என்னுடன் பேசவில்லை......" என்று சிரித்தாள் துளசி.

"ராஜா ஊர் திரும்ப இன்னும் இரண்டு வருஷம் ஆகுமே! அதுவரை உனக்கு பூவின் கதையும், பூசணிக்காயின் பூர்வீகமும் யார் சொல்லித் தரப்போகிறார்கள்?"

"கேலி செய்ய ஆரம்பித்துவிட்டீர்களே மாமா. ஆமாம் அப்பா எங்கே இன்னும் வரவில்லை. சாயங்காலமே வந்துவிடுவேன் என்றாரே......—" என்று பேச்சை வேறு திசையில் திருப்பினாள்.

"பேச்சைத் திருப்புகிறதைப்பார். சோமு என்ன குழந்தையா? நம்ம வண்டி ஸ்டேஷனுக்குப் போயிருக்கிறது. இதோ வந்துவிடுவான். ரயில் வண்டி தாமதமாக வருகிறதோ என்னவோ. சரி, நீ காலாகாலத்தில் சாப்பிட்டுவிட்டு தூங்கு. உன் அம்மா காத்திருக்கப் போகிறாள். அப்பா வந்து சாப்பிட்டதும் இங்கே வரச் சொல்"

"சரி மாமா" என்று சொல்லிவிட்டு துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடினாள் துளசி.

அவள் போனபின் அன்று வந்த தினப்பதிப்பைப் படிக்கலானார். அவர் மனதிற்கு செய்திகள் ஒன்றும் ரம்மியமாக இல்லை, பத்திரிகையை மேஜையில் போட்டுவிட்டு சன்னல்படியில் உட்கார்ந்துகொண்டு கீழே இருண்டு கிடந்த கிராமத்தைப் பார்த்தார். இருள், இருள், இருள். எங்கும்இருள்!

(மறு பக்கம் பார்க்க)

(முன்—ம் பக்கத் தொடர்ச்சி)

வானத்திலும் கருமேகக்கூட்டங்கள்! கண்ணுக்கு ஒரு நட்சத்திரம் கூட தென்படவில்லை.

அவர் மனதில் ஒரு விவரிக்க முடியாத ஏக்கம் ஆரம்பித்தது, காரணம் இன்றி அவர் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்தது. மகனைப் பிரிந்து ஆறு வாரங்கள் தானே ஆகியிருந்தன. இன்னும் எவ்வளவு மாதங்கள், வாரங்கள் பாக்கி இருந்தன!

அவர் அறையில் எப்பொழுதும் எரிந்துகொண்டிருந்த நெய் விளக்கைப் பார்த்தார் விளக்கின் சுடர் நின்று ஆடாது, அசையாது எரிந்தது. அதையே கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்.

திடீரென்று பேய்க்காற்று அடித்தது. நெய் விளக்கை அணைத்துவிட்டுப் போயிற்று. கங்காதரர் நெஞ்சை அழுத்திப்பிடித்துக்கொண்டார். நெய் விளக்கு அணைந்தது என்ன ஆபத்துக்கு அறிகுறியோ என்று மனம் பின்னும் பேதலித்தது. ஈஸிச்சேரில்போய்ப் படுத்தார்.

காற்றைத் தொடர்ந்து மழையும் சிறு தூறலாக பெய்ய ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் காற்று நின்று மழை வலுத்து அடைமழையாக பெய்ய ஆரம்பித்தது.

3

தங்கவயல் கிராமத்தின் எல்லையை இயற்கை அன்னையே வகுத்திருந்தாள்.

கிழக்காக ரயில்வே ஸ்டேஷன். தெற்குப் பக்கமும் மேற்குப் பக்கமும் வளைந்து ஓடும் ஒரு காட்டாறு. வடக்கே குன்றுகள்.

ஊருக்கு நடுவே நடுநாயகமாக அமைந்திருந்தது ஒரு பழமையான பெரிய கோவில். பெரிய பண்ணையார் கங்காதரரின் பணம் கோவிலைச் செப்பனிட உதவிற்று.

அவர் கோவிலுக்கும் குடிகளுக்கும் செய்யும் உதவியும் சலுகையும் மற்ற சில்லரை பண்ணையார் கண்களை உறுத்தின. அவரால் தங்கள் பெயரும் பணமும் கரைகிறது என்ற கெட்ட எண்ணமும் அவர்கள் உள்ளத்தை அரித்துக்கொண்டிருந்தது.

நல்ல காரியங்களில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள். ஒத்துழைக்கவும் மாட்டார்கள். பணம்! பணம்! பணம் தான் அவர்கள் தெய்வம்.

அளவிலா பணமும் நிலமும் இருப்பதால் மட்டும் ஒருவனுக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்குமா? ஏழைகளே உலகத்தில் அதிகம். அவர்களின் இல்லாமையும் பொறுமையுமே சமயத்தில் செல்வம் படைத்தவர்கள் பொருளுக்கும் உயிருக்கும் உலையாகலாம், தன்னலம் கருதா சேவை வித்தை, உழைப்பு இவைகளே எதிர் காலத்தில் மதிக்கப்படும். ஏழையின் பசிக்கு பலம் அதிகம். பணப்பசிக்காரர்கள் பலம் அதன் முன் நிற்க முடியுமா?

ஊரிலே பெரிய பண்ணையார் கங்காதரர் ஒரு கட்சி, சில்லரைப் பண்ணையார்கள் எதிர்கட்சி.

அவர்கள் கங்காதரரை எப்படியாவதும் மட்டந்தட்ட எண்ணி பல சூழ்ச்சிகள் செய்தனர். எல்லாவற்றையும் சோமநாதரின் புத்திகூர்மையாலும் நன்றியறிதலுள்ள அவர் குடியானவர்களாலும் தவிர்க்கப்பட்டன.

சூழ்ச்சிகளுக்கெல்லாம் சூத்திரதாரன் சிங்காரம். கங்காதரரின் நெருங்கிய பந்து, அவர் ஆஸ்தியின் மேல் கண். கங்காதரருக்கு பிள்ளைப் பேறு இல்லாத நாளில் பல பகல் கனவுகள் கண்டான். ராஜா பிறந்து வளர்ந்து அவனும் ஆளாகி அமெரிக்காவுக்கு மேற்படிப்புக்குப் போன பின் அவன் கனவுகள் சிதைந்தன. சூழ்ச்சிகள் மலிந்தன.

இரும்பு மனிதன் சோமநாதர் இருக்கும்வரை சூழ்ச்சிகள் வெற்றி பெறாது என்பதை அறிந்தவுடன் அவரை அம்பிகாபவனத்திலிருந்து வெளியேற்ற சூழ்ச்சிகள் செய்யலானான். சோமநாதரை நிழல்போல் ஒரு ஒற்றன் தொடர்ந்துகொண்டிருந்தான்.

அன்று சோமநாதர் மதுரைக்கு ஏதோ முக்கிய தஸ்தவேஜியோடு போயிருப்பதை அந்த ஒற்றன்மூலம் அறிந்து அவரிடமிருந்து அதை அபகரிக்க சிங்காரம் தன் சகாக்களை அனுப்பியிருந்தான்.

அம்பிகாபவனத்தில் காங்காதரர் சோமநாதரை எதிர்பார்ப்பதுபோல் சிங்காரமும் கொட்டும் மழையில், ஹாலில் மேலும் கீழும் நடந்துகொண்டிருந்தான், அனுப்பிய சகாக்களை எதிர்பார்த்துக்கொண்டு. அடிக்கடி அவன் கண்கள் பங்களாவின் வெளிக் கதவின் பக்கம் நோக்கின.

—தொடரும்.

கள்ளிக்கோட்டையில்
கண்ணகி ஏஜண்டு:
கே. எம். முரளிதர்,
கேரளா பிரஸ்,
கோர்ட் ரோடு.

எல்லாம் நல்லவை!
ஸ்ரீ
சண்முகா கபே
பிருமணாள் காபி கிளப்
புரோப்ரைட்டர்: ஆர். என். சண்முகம் பிள்ளை
290, ராமநாட் ரோட் :: மதுரை

கனம் கிருஷ்ணமாச்சாரியின் ராஜிநாமா வேடிக்கை

ஒரு ஆறு மாதங்களுக்கு முன் மத்திய சர்க்காரின் வர்த்தக—தொழில் இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, பிரதமர் நேருவோடு ஏதோ ஒன்றில் மனவேறுபாடு கொண்டு ராஜிநாமாச் செய்தார்—உடனே ரயில்மூலம் டில்லியிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டார்.

இந்த ராஜினாமா மூலம், நேரு அதிருவார்; திரும்ப அழைப்பார்; மறுப்போம்; மத்திய ஆட்சியே கலகலத்துவிடும்; தனது ஜமீந்தாரிஆடம்பரத்தைத் தொடர்ந்து நடத்தலாம் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டினார் பாவம்! டி. டி. கே.

ஆனால் நடந்தது வேறு. அவர் பதவியின் விதியை அவரே முடித்துக்கொண்ட கதையாகி விட்டதாம்.

எப்படியென்றால்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரி ராஜிநாமா செய்துவிட்டதை நேரு, ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை, உடனே திரு. கிருஷ்ணமாச்சாரிக்குப் பதிலாக அந்தப் பதவியை வகிக்க வேறு சில நபர்களின் பெயர்களைக குறிப்பிடும்படி காமராஜரை நேரு கேட்டாராம். கனம் காமராஜ் திரு குமாரசாமிராஜா அல்லது திரு. அவினாசிலிங்கம் செட்டியார் இருவரில் ஒருவரை டி. டி. கே. க்கு பதிலாக நியமிக்கலாம் என்று நேருவுக்குச் சிபாரிசு செய்தாராம்.

பிரமாதப் பலனை எதிர்பார்த்து ஹிருதயமே வியர்க்கும்படியான வேதனைப் புழுக்கத்தில் சென்னையில் காத்திருந்த டி. டி, கே. க்கு இது தெரியாது. ஆனால் அவருக்கு நெருங்கிய நண்பர் ஒருவருக்கு டி. டி, கே, யின் பதவி கை மாறும் ஏற்பாடு தெரிந்துவிட்டது. உடனே அந்த நபர் டி. டி. கே. க்கு எச்சரித்துவிட்டார். எதையோ எதிர்பார்த்து நீர் செய்த ராஜிநாமா, உம்மை வெறும் வியாபாரியாகவே ஆக்கிவிடும் கட்டத்தை எட்டிவிட்டது.. காலமறிந்து விழித்துக் கொள்ளும் என்பதுதான் அந்த எச்சரிக்கை.

பாவம்! டி. டி. கே. வெலவெலத்துப்போனார். அன்று இரவே விமானத்தில் ஏறி டில்லிக்குப் போய், நேருவிடம் சாஷ்டாங்க சரணாகதியடைந்து மறுபடியும் மந்திரியானாராம்.—'பிளிட்ஸ்' நிருபர் வெளியிட்டிருக்கிறார்.

நடப்பு இவ்வாறு கணவனோடு பிணங்கிக்கொண்ட மனைவிமாதிரி டில்லியிலிருந்து சென்னை வந்த டி. டி. கே., நேரு ராஜிநாமாவை ஏற்கவில்லை—என்ன செய்வது என்று—மத்திய அரசாங்கமே தான் இல்லாவிடில் எடுத்தடி வைக்க முடியாது என்ற தோரணையில் சொல்லிவிட்டு மீண்டும் மந்திரியாகிவிட்டார்.

இதுவும் ஒரு இராஜதந்திரந்தான். இப்போது எந்த மந்திரி எதைச் செய்தாலும்மே அதற்கு ராஜதந்திரம்என்றுதானே பெயர்?

ஒரு சொல் கேளீர்! குழந்தை வளர்ப்பு என்பது ஒரு தனிக் கலை!

அந்தக் கலையைத் தெரிந்த தாய், தனது குழந்தையைப் பக்குவத்தோடு பராமரிக்கிறாள் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு, அவள் அலமாரியில்

"ஆரென்ஸ்"

கிரைப்-டில்-வாட்டர்

வைத்திருக்கிறாள் என்பதே!

சிரங்கு, கட்டி, காயங்கள், கொப்புளங்கள் அத்தனையையும் பஞ்சாய பறக்கடிக்க வல்லது ....

சோஜுல்

தயாரிப்பு:— பாரத் டிரக் ஹௌஸ், மதுரை.

உரிமை:- டி. என். சி. நாகலிங்கம் பிள்ளை, அண்ட் சன்ஸ்.

(10ம் பக்கத்தொடர்ச்சி)

ஆனல் பணக்காரர்களை கடவுள் தான் உண்டாக்கியது. ஆகவே அவர்களை நீங்கள் நேசியுங்கள்.

இந்தப் பாழும் உலகில் சமத்வம் ஏன்? எல்லாமுமே அநித்தியமாக இருக்கையில், நாம் ஏன் சமதை வேண்டிப் போராட வேண்டும்?

கடவுள் சன்னதியில் எல்லோருக்கும் சமத்வம் வேண்டும் என்ற ஒன்றில்தான் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும், வாழ்க்கையில் ஒருவன் அதிக சுகம் அநுபவித்தால் அவனைப் பார்த்து ஆத்திரப்படுவது ஆண்டவனைப் பழிப்பதற்கு ஒப்பாகும். எனவே இந்த உலகில் இருக்கிறவரை அடங்கி இருக்கவும், பணிந்து போகவும் பழகிக்கொள்ளுங்கள், பணியப்பணிய உங்கள் கவலை கரையும். கடவுள் உங்கள் பக்கம் இருக்கிறார். பிறகு என் சங்கடம்? என்று கூறிய அந்தக் கிழட்டுமனிதன் என்னை வென்று விட்டது மாதிரி வாயை அலட்சிய பாவனையில் அகல விரித்தார். அதற்குள் அடங்கிக் கிடந்த தங்கப் பற்கள் வெளியே கொஞ்சம் ஒளி அடித்தன. ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார். அந்தப் பார்வை என்னைச் சரணுகும்படி கட்டளையிட்டதாகப்பட்டது எனக்கு.

உடனே எனக்கு எரிச்சல் ஏறிவிட்டது. இப்படியும் மனிதர்கள், கடவுள் பெயரைச் சொல்லி பணக்காரர்களாக வாழ்வதை ஒருநாடு அநுமதிக்கிறதே என்ற அதிசயம் ஊடே எழும்பினாலும் அதை மேவிச் சென்றது எரிச்சல். மதத்தை நீங்கள், உங்கள் நலனுக்கு மிகச் சாதுர்யமாய்ப் பயன் படுத்துகிறீர்கள்...... என்றேன் நான்.

அவர்: ஆம்! அதன் அருமை எனக்குத்தான் தெரியும் என்றார் வெடுக்கென்று.

நான், இடை மறித்து ஆம்! மதம் ஏழைகளைப் பொறுத்தவரை, பணக்காரர்களை இந்த உலகில் நிம்மதியாக வாழவைப்பதற்காகவாவது தேவை தான்.

எல்லா இன்பமும் ஏழைகளுக்கு இங்கல்ல—சொர்க்கத்தில்தான் என்று நீங்கள் சொல்வதை அவர்கள் நம்புவதற்கு மதம்தானே உதவிசெய்கிறது, பாவம்! பாமர ஏழைகள், உலகில் ஆடம்பரத்தோடு வாழும் வாழ்க்கையையும், தமது எளிய—பற்றாக்குறை நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். மேடு-பள்ளம் அதிகம் காண்கிறது. அதோடு உங்கள் மதபோதமும் ஒன்று சேருகிறது- தம் தலைவிதி இதுதான் என்ற முடிவுக்கு ஏழைகளை இழுத்துவந்து உங்களுக்கு உழைக்க வைத்து விடுகிறது, நீங்கள் மிகைபடுத்திக்கூறும் மதபோதம் இது தொலையட்டும்.

சோஷலிஸ்ட்டுகளைப்பற்றி உங்கள் கருத்தென்ன? என்று கேட்டேன்-

அவர் கொஞ்சமும் தயங்கவில்லை—யோசிக்கவுமில்லை.

சோஷலிஸ்டுகளா? அவர்கள் தான் சைத்தானின் உண்மையான தூதுவர்கள் என்று பட்டென்றுகூறிவிட்டு மடக்கிவைத்திருந்த முழங்காலைநீட்டி டிக்கொண்டார்.

அப்புறம் தொடர்ந்து சொன்னர்: சோஷலிஸ்டுகள் இருக்கிறார்களே அவர்கள் பயங்கரமானவர்கள். நல்ல இயந்திரத்தின் உயிர்ப்பகுதியில் செம்மி வைக்கப்பட்ட மணல்மாதிரி அந்த நபர்கள்!

அந்த மணல் இயந்திரத்தின் எல்லாப் பகுதிகளையும் ஊடுருவி, இயந்திரம் செம்மையாய் இயங்குவதைத் தடுக்கிறது.

சமுதாயம் சரிவர இயங்குவதைக் கெடுப்பதே சோஷலிஸ்டுகளின் வேலை.

ஒரு சரியான அரசாங்கமாயிருந்தால், சோஷலிஸ்டுகளே முளைக்க முடியாது. அமெரிக்காவில் அம்மாதிரி சோஷலிஸ்டுகளை முளைக்க விடாமற் செய்யும் அரசாங்கம் இன்னும் அமையவில்லை.

சோஷலிஸ்டுகளுக்கு அமெரிக்காவிய் குடியுரிமை இருக்கிறது. அதனால்தான் அவர்கள் அரசாங்கப்பகுதிகளில் புகுந்து கேடுபுரிய முடிகிறது. ஆகவே, அமெரிக்க அரசாங்கம் சோஷலிஸ்டுகளுக்குள்ள குடியுரிமையைப் பறித்துவிடவேண்டும். பிறகு அவர்கள் வாலாட்ட முடியாது. அப்புறம் அரசாங்க உறுப்பினர்களாகக் கோடீஸ்வார்கள் தான் வருவார்கள். அந்த நிலையில் அரசாங்கமும் நிம்மதியாக நடக்கும். நாடும் செழிப்புறும்.

அப்படி ஒரு நிலைமை உண்டாக்க வாஷிங்டனில் உள்ள அரசாங்கத்தினருக்கு இன்னும் புத்திவரவில்லை, வந்தால்த்தான் சோஷலிஸ்டுகளுக்குரிய குடியுரிமையைப் பறித்து நிம்மதியாக வாழ்வார்கள். இதுதான் என் குறி என்றார் கொஞ்சமும் கூச்சமின்றி.

எனக்கு என் ஈரல் குலையை யாரோ நேரடியாகச் சுட்டது மாதிரி இருந்தது.

நீர் சரியான மனிதரய்யா என்றேன் ஆத்திரத்தின் அழுத்தலுடன்.

(இன்னும் வரும்)

ஸ்வர்ங்காவின்
சந்திரா
டால்கம்
பௌடர்
மிகச்
சிறந்தது

செந்தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு திடகாத்திரமளிக்கும் சிறந்த உணவு

ராஜா பார்லே
பிஸ்கட்ஸ்

ஸ்தாபிதம்: 1926
நேம் அன் டிசைன் ரிஜிஸ்டர்டு
நிர். 143106
போன் நிர். 334.
திண்டுக்கல் ரோடு—மதுரை
கிளை: மெயின் ரோடு திண்டுக்கல்.

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

குறைந்த பக்ஷம் முனிசிபல் தேர்தலில் ஒரு வார்டுக்கு நின்று போட்டியிட்டுத் தோற்றுவது இருக்கலாம்—பலனுக்கு உத்திரவாதமில்லாது போனாலும் திருப்திக்கு உத்திரவாதம் கிடைத்திருக்கும்!

மிக உன்னதமான— உயிர்க்களை படர்ந்த படங்களன்றி வேறெதையும் தீண்டாத மதுரை ராயல் டாக்கீஸ் கம்பெனியார் இந்த அரோகராப் படத்தை மதுரையில் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை அறியும் போது நெஞ்சு சுண்டுகிறது.

12மணி, 1மணி, 2மணி, ரயிலுக்குப் போகிறவர்கள் வீதியிலே திரிந்தால் போலிசார் சந்தேகப்படுவார்கள்— ஹோட்டலில் அதிக நேரம் உட்கார முடியாது—தெரிந்தவர்களின் வீடுகளில் படுத்தால் ரயில் போய் விடும்—ஆகவே அவர்கள் நேரத்தைப் போக்க ஏதோ கொஞ்சம் சில்லரையைக் கொடுத்து இந்தப் படத்தைப் பார்த்துவைக்கலாம். அதற்குத் தான் இந்தப் படம் லாயக்கு—

அதுவும் நியூ சினிமாவாக இருப்பதால்.

நியூ சினிமாச் சிறப்புக்கு இது ஒரு திருஷ்டி பரிகாரம்!

ஸ்வீட், காரம், காப்பி கொடுத்துக் கூப்பிட்டாலும் உறக்கம் வராத நோயாளிகளன்றி வேறு எவரும் இதைப் பார்க்கத் தகுதி இல்லை.

உயர்தர
வெண்ணை-நெய்
காபிபவுடருக்கு
கிருஷ்ணா ஸ்டோர்ஸ்,
மேலாவணிமூலவீதி, மதுரை.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

பொழுதுதான் ஒரு நிர்வாகத்திற்கு ஒரு நிர்வாகம் எப்படிப் பட்டதென்பதை அளவிட்டு முடிவுக்கு வர முடியும்.

நாட்டையே ஆளுங் கட்சியான காங்கிரஸ், நகரசபைகளையாவது பிறரின் நிர்வாகத்திற்கு விட்டுச் சரி பார்த்திருக்க வேண்டும். ஆனால் காங்கிரஸ்கட்சி அதிலும் கை வைத்து வருகிறது. ஆகவே மக்கள் தான் காங்கிரஸ் தலைமைக்குப் பெருந் தன்மையை புகட்ட வேண்டும்—வோட்டுப் போடாமல் விடுவதன் மூலம்?

இன்று யாரரோ, எவரெவரோ, எல்லோருக்கும் காங்கிரஸ் தண்ணீர் தெளித்து விட்டிருக்கிறது.

இதை மக்கள் இனியும் ஏற்கலாமா?

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

விட்டதாக மத்திய பாரத் போலீஸ் மந்திரி கூறி, தமது திறமையை அகில இந்திய அறிமுகத்திற்கு விட்டுவிட்டார்- ஆனால் நடந்தது வேறு. போலீஸ் மந்திரியின் சவால் வெறும் சவடாலாகிவிட்டது என்று டில்லி வட்டாரத்தில் பேசிக்கொள்வதாக 'பிளிட்ஸ்' நிருபர் அறிவித்திருக்கிறார்.

மான்சிங்கின் சவத்தை அவனது மனைவி, மருத்துவ சோதனைக்காகத் தன்னிடம் தரும்படி எவ்வளவு வேண்டியும் பிரேதத்தைக் கொடுக்க மறுத்துவிட்டார்களாம்.

எப்படிக் கொடுப்பார்கள்—குட்டு வெளியாகிவிட்டால்?

வீட்டுக்கு வீடு தேவை!
ரமனீஸ் பேபிகிரைப்
✿ குழந்தைகளைப் பூரிப்போடு வளர்த்து வாழ்விக்க நினைக்கும் ஒவ்வொரு தாயும், கட்டாயம் வைத்துக்கொள்ள வேண்டியது
✿ ரமனீஸ் பேபி கிரைப்பின்மூலம் வளர்க்கப்படும் குழந்தைகளுக்கு, வளர்ச்சி, வளம், வனப்பு ஆகியவைபற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை
அற்பச் செலவில் அதிசய சாதனை! சைபால்
● இயற்கையால் ஏற்படும் கொப்புளங்கள் அத்தனையும்
● செயற்கையால் ஏற்படும் காயங்கள்
சைபாலின் பிரயோகத்தால்விரைவில் குணம் காணும்
இரண்டும் கைபடாமல் நவீன யந்திரங்களால் தயாரானவை
— தயாரிப்பாளர் —
தி சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி, மதுரை

வெளியிட்டதும், ஆசிரியரும் ஆர். சக்திமோகன் (ராகவன்) அச்சிட்டது: விஜயா பிரிண்டர்ஸ் லிமிடெட், டவுன் ஹால் ரோடு—கண்ணகி அலுவலகம். 80, மேல ஆவணிமூலவீதி மதுரை.